**24.02.2026**

**O.S.No.100/2014**

**பி.வா.சா.1 : குமாரசண்முகம்**

<u>**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>**:-**

1) தாவா 1வது ஐட்ட சொத்து 50 ஆண்டுகளுக்கு முன்பே எனது அப்பாவிடம் எனது தாத்தா ஒப்படைத்தார் என்று சொல்வதற்கு எவ்வித ஆவணமும் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஆவணங்கள் எதுவும் எழுதி கொள்ளவில்லை. எனக்கு 41 வயதாகிறது. 1999ம் வருடம் வாதியும் பிரதிவாதியும் பாகப்பிரிவினை செய்துகொண்டார்கள் என்றும் அது 1வது ஐட்ட சொத்து வெங்கடேசன் பெயரில் இல்லை என்று சொன்னால் அது தாத்தா பெயரில் உள்ளது. என் அப்பாவுக்கு 3 மனைவிகள் என்றால் சரிதான். மேற்படி 3 திருமணமும் அவருடைய விருப்பத்தின் பெயரில் தான் செய்து கொண்டார் என்றால் சரிதான். என் அப்பா எனது தாத்தாவின் பேச்சை கேட்காமல் அவர் திருமணம் செய்து கொண்டு வேறு ஊரில் இருந்தார் என்றும் அவர் என் தாத்தாவுடன் சேர்ந்து இருக்கவில்லை என்றால் சரியல்ல. ஒரே ஊரில் தான் இருந்தார்.

2) என் அப்பா தன் சாதியை விட்டு வேறு சாதியில் தான் திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். தாவா சொத்துக்களை என் அப்பாவும் என் தாத்தா செங்கமலை கவுண்டர் வாங்கியதாக எவ்வித ஆவணமும் இல்லை என்றால் சரிதான். சொத்து மருத கவுண்டருக்கு பாத்தியப்பட்டது அதை செங்கமலை கவுண்டருக்கு அனுபவமாக கொடுத்துவிட்டார். 17.02.1999ம் பாகப்பிரிவினை செய்து கொண்ட பத்திரத்தில் (வா.சா.ஆ.2) இனிமேல் பிரித்து கொள்ளக்கூடிய சொத்துக்கள் எதுவும் இல்லை என்று எந்த வாசகமும் இல்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் (வா.சா.ஆ.2)-ல் இனிமேல் பிரித்து கொள்ளக்கூடிய சொத்துக்கள் எதுவும் இல்லை என்ற வாசகம் எங்குள்ளது என்றால் சாட்சி படித்து பார்த்து விட்டு இல்லை என்று சொல்கிறார்.

3) எனவே என் அப்பாவுக்கு பிரிந்து நிலத்தில் கிணறு சர்வீஸ் இல்லை என்று பொய்யாக சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. பிரிக்கும் போது சர்வீஸ் மட்டும் இருந்தது. மண்ட கிணறு அந்த பக்கம் இருந்தது. நாங்கள் புதிதாக கிணறு வெட்டி இந்த சர்வீஸ்சை மாற்றி விட்டோம். ஏற்கனவே கிணறு இருந்தது. நாங்கள் அதை ஆழப்படுத்தி உள்ளோம். எனக்கு பாகம் பிரிந்து சொத்துக்கள் சாலை வசதிக்கு முன்புறமாகவும் வாதிக்கு பிரிந்த சொத்துகள் சாலை வசதி இல்லாமல் நிலத்திற்கு உள்ளேயும் உள்ளது என்றால் சரிதான். வாதியின் நிலம் நன்செய் நிலம். எனது நிலம் புன்செய் நிலம் (களர் நிலம்).

4) நானும் எனது அண்ணனும் மற்றும் அப்பாவும் பாகபிரிவினை பத்திரத்தில் இனிமேல் நமக்குள் பிரித்து கொள்ள கூடிய சொத்துக்களோ எதுவும் இல்லை என்ற வாசகம் உள்ளது. வா.சா.ஆ.2 ல் 1999 ம் ஆண்டு வாதியும் எனது அப்பாவும் பிரித்து கொண்ட பாக பிரிவினை பத்திரத்தில் மேற்படி வாசகம் இல்லை, மீண்டும் பாகம் பிரித்து கொள்ளாத சொத்துகள் இருந்ததால் தான் அந்த வாசகம் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ 3 ல் (25.03.2010) உள்ள பாகப்பிரிவினை பத்திரத்தில் வாதியும் எனது அப்பாவும் பிரித்து கொண்ட பூர்வீகமான சொத்துக்கள் என்று கண்டு தான் பிரிக்கப்பட்டுள்ளது. 1 வது ஐட்ட சொத்துக்கள் தவறு என்று சொல்லி உள்ளேன், அது சரியாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது நிருபண வாக்குமூலத்தில் பொது குடும்ப சொத்து எது என்று தெரியாமல் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். 2.44 ஏக்கர் தான் பொது குடும்ப சொத்து என்றால் சரிதான்.

5) மேற்படி கிரய பத்திரத்தில் வா.சா.ஆ.3 ஆவணத்தில் 2.37 ஏக்கர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதை ரவிசந்திரன் மற்றும் செந்தில்குமாருக்கு குறுக்காக நிலம் வருவதால் அதை அவர்கள் நேர் செய்து கொண்டார்கள். 2.44 ஏக்கர் தான் காடு. நேர் செய்து கொண்டதால் 2.37 ஏக்கர் தான் ஸ்தலத்தில் உள்ளது. தாவா சொத்தில் 2 வது ஐட்ட சொத்து தனிப்பட்ட

முறையில் பாகம் பிரிந்ததாக சொல்வதற்கு எவ்வித ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2 வது ஐட்ட சொத்து எனக்கு நேரடியாக பட்டா வழங்கப்பட்டுள்ளது என்று சொல்லப்பட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல. அந்த இடத்தில் எனது தாத்தா இருக்கும் போது ஓட்டு வீடு இருந்தது. அது தற்போது இடிந்து உள்ளது.

6) ஓட்டு வீடு கட்டப்பட்டு சுமார் 100 வருடம் இருக்கும் என்றால் சுமார் 60 வருடம் தான் இருக்கும். அந்த வீடு மருதை கவுண்டர் சொத்து அல்ல செங்கமலை கவுண்டர் கட்டிய வீடு. நான் சொல்வது போல செங்கமலை கவுண்டர் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது பொய் என்றும் வழக்கிற்காக ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா 1 மற்றும் 2 ஐட்ட சொத்தில் வாதிக்கு சமபங்கு பாத்தியம் உரிமை உள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனவே வாதிக்கு தாவா சொத்தில் வழக்கு கோரி உள்ளது போல 1/2 பாகம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. என் அப்பா உயிருடன் இருந்தபோதே பாகம் கேட்டிருக்க வேண்டும். தாவா சொத்து முழுவதும் மருதை கவுண்டருக்கு முழுவதும் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும் வாதியின் பாகத்தை மறுப்பதற்காகவே வாதிக்கு பாகம் இல்லை என்று சொல்லி வருகிறேன் என்றால் சரியல்ல. ஓட்டு வீடு மருதை கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றும் கால போக்கில் அது சிதிலம் ஆகிவிட்டது என்றும் அதில் செங்கமலை கவுண்டருக்கு பாத்தியப்பட்டதில்லை என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2026.02.24 17:46:32 +0530

**Subordinate Judge, Attur.**